
Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்


www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 68 • 27.11.2016





இந்தியாவின் வெற்றி...
## கிரிக்கெட்டின் தோல்வி!



அதிர வைக்கும்
பிரமிட் மோசடி




நூற்றாண்டு கடந்து நிற்கும்
வ/ஓமந்தை மத்திய கல்லூரி

‘இருந்தால் தலைவன் இல்லாவிட்டால் கடவுள்’

# பிரபாகரன் ஸ்பெஷல் 10

# ‘இருந்தால் தலைவன் இல்லாவிட்டால் கடவுள்’

# பிரபாகரன் ஸ்பெஷல் 10





வினோ

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்ததினம் கடந்த 26ம் திகதி புலம்பெயர்ந்த தேசங்களில் கொண்டாடப்பட்டது. இந்த வருடம் பிரபாகரனிற்கு 62வது அகவை. நவம்பர் 26ம் திகதி பிரபாகரனின் பிறந்ததினம், 27ம் திகதி மாவீரர்தினம் என அந்த நாட்கள் இலங்கை அரசியலில் எதிர்பார்ப்புமிக்க நாட்களாக கடந்த காலங்களில் அமைந்திருந்தது.

மாவீரர்தினத்தின்றுதான் பிரபாகரன் பகிரங்கமாக உரை நிகழ்த்துவார். புலிகளின் கொள்கை முடிவுகளையெல்லாம் அன்று ஒருநாள்தான் அறிவிப்பார். அதனால், பிரபாகரன் என்ன சொல்வார் என்பதை அறிவதில் ஊடகங்கள் எச்சச்சக்க போட்டிபோடும். அறிந்து கொள்வதில் தமிழர்களிற்கு ஆவல். அதைவிட ஆர்வம் எதிர் தரப்பிற்கு. ஒவ்வொரு நாளையும், ஒவ்வொரு மணித்தியாலத்தையும் ஊடகங்களின் முன் பேசி பொழுதை கழித்துக்கொண்டிருக்கும் இன்றைய அரசியல்வாதிகள் மத்தியில், "செயலைப் போன்ற சிறந்த சொல்லில்லை" என வாழ்ந்து காட்டியவர் பிரபாகரன்.

பிரபாகரனின் பிறந்தநாள் சமயத்தில் இலங்கை பாதுகாப்பு தரப்பு கண்ணுக்குள் எண்ணெய் விட்டபடி கண்காணித்து கொண்டிருந்தாலும், பிரபாகரன் தனது பிறந்ததினத்தை கொண்டாட விரும்புவதில்லையென்பதே உண்மை. ஆரம்பத்தில் அமைப்பில் அவரது பிறந்தநாள் கொண்டாடப்பட்டபோதும், அதனை பிரபாகரன் விரும்பாததையடுத்து பின்னாளில் சாதாரணமாக தமக்குள் கொண்டாடுவதுடன் நிறுத்திக்கொண்டனர் அமைப்பிலிருந்தவர்கள்.

இந்த சமயத்தில் பிரபாகரன் பற்றிய சில அபூர்வ தகவல்களை இங்கு பட்டியலிடுகிறோம்.

- பிரபாகரன் ஒரு விடயத்தை நினைத்தால், அதை அடையும் வரை வேறு சிந்தனைகளிற்கு இடமளிக்க மாட்டார். அதிகம் தனிமையில் உட்கார்ந்திருந்து அது பற்றிய புதுபுது திட்டங்களைதான் தீட்டிக் கொண்டிருப்பார். அந்த திட்டம் நிறைவேறினால் பெரும் கொண்டாட்டத்தையே நிகழ்த்திவிடுவார். உதாரணமாக, ஒரு இராணுவ இலக்கை அடைந்தால் போராளிகளிற்கு விசேட விருந்தளித்து மகிழ்விப்பார்.
- அதிக பிரச்சனை, நெருக்கடியென்றாலும் அதை முகத்தில் காட்டிக்கொள்ள மாட்டார். ஆனால் தீவிரமாக சிந்தித்தபடியிருப்பார். அதிகம் அறையை பூட்டிவிட்டு தனிமையில் இருந்து சிந்திப்பார். அல்லது காட்டுமரங்களிற்கு இடையில் கட்டப்பட்ட வலையில் படுத்திருந்து கண்ணை மூடிக்கொண்டு தீவிரமாக யோசிப்பார். எப்பொழுதாவது மனதிற்கு நெருக்கமான தளபதிகளை அழைத்து பக்கத்தில் உட்கார வைத்திருப்பார். அந்த பட்டியலின் முதலிடத்திலிருப்பவர் [illegible].
- பிரபாகரன் மாணவப்பருவத்தில் ஆயுதப்போராட்டத்தில்

தொடர்ச்சி 27-ம் பக்கம்



# மாவீரர் நாள்





## முதல் மாவீரன்

# இனத்துவேசத்தை கட்டுப்படுத்த வேண்டும்

ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்தின் முதன்மையான தேசிய வேலைத்திட்டம் இனங்களிற்கிடையிலான நல்லுறவு. அதன் மூலம் புதியதொரு இலங்கையை கட்டியெழுப்பல். நாட்டிலுள்ள அனைத்து இனங்களின் உரித்துக்களையும் அங்கீகரிப்பதிலிருந்தே இந்த தேசிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கிறது.

இந்த அரசின் தேர்தல் வாக்குறுதி இன நல்லிணக்கம். இனங்களின் தனித்துவம் பேணப்படாமல், தனியொரு இனத்தை முதன்மைப்படுத்தி இனஐக்கியம் ஏற்படுத்தப்பட முடியாது. எனவே, தேர்தல் காலத்திலேயே நாட்டிலுள்ள அனைத்து இனங்களின் உரித்துக்களையும் அரசு ஏற்றுக்கொண்டு விட்டதென பொருள்.

ஆனால், அந்த பணி சீராக நகர்கிறதா? இது மிகப்பெரிய கேள்வி. அண்மைய நாட்களில் இலங்கையில் நடக்கும் சம்பவங்கள் ஏற்படுத்தும் கேள்விகள் கடுமையானவை. இனங்களிற்கிடையிலான பதற்றத்தை அதிகரிக்க இரகசிய முயற்சிகள் நடக்கின்றன என ஊகிக்கத்தக்க தொடர் சம்பவங்கள் நடக்கின்றன. இவை மிக ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள். எனினும், அரசு இவற்றை சரியாக கையாள முடியாமல் திண்டாடுகிறதோ என்ற கேள்விதான் சாதாரண மக்களிடம் எழுந்துள்ளது.

சிங்கள கடும்போக்காளர்களிடம் இருந்து சிறுபான்மை இனங்களிற்கெதிரான குரோதப் பேச்சுக்கள் திடீரென அதிகரித்த போக்கை காட்டுகிறது. தமிழர்கள், புதிய அரசியல்சாசனம் என்பவற்றிற்கு எதிரான முனையொன்றும், முஸ்லிம்களிற்கு எதிரான முனையொன்றும் திறக்கப்பட்டுள்ளது. புதிய அரசு பதவியேற்றபின் மிகச்சிறியளவில் இருந்த இனக்குரோத பேச்சு தற்போது திடீர் எழுச்சி பெற்றுள்ளது. மகிந்தவை பின்னணியாக கொண்ட கூட்டு எதிரணி பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பேசிக்கொண்டிருப்பதற்கு சமாந்தரமாக, ஒரு இனவாத செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது.

ஒரு சாதாரண பிக்கு நாட்டின் ஜனாதிபதிக்கே சவால் விடுவதை போல நடக்கிறார். இன்னொரு இனத்திற்கு எதிராக கொலை அச்சுறுத்தலும் விடுக்கிறார். சாதாரண இளைஞன் ஒருவன், தினமும் வீடியோ மூலம் நச்சுக்கருத்தை பரப்புகிறான். அவனின் பின்னால் பெருங்கூட்டம். இவை சாதாரண உதாரணங்கள். நிறுவனமயப்பட்டு வரும் இனவாத செயற்பாட்டின் சிறுதுளி உதாரணங்கள்.

நாட்டின் ஒவ்வொரு பாகத்திலும் இனவாத செயற்பாட்டாளர்களினால் கிளப்பப்படும் பதற்றம் பற்றிய செய்திகளுடன்தான் ஒவ்வொரு நாளும் விடிகிறது. போதாதற்கு அரச அமைச்சர்களின் கருத்துக்கள் சில தவற்றிற்கு சமமான சர்ச்சையை கிளப்புகிறது.

வடக்கிலிருந்து எழும் உரிமைக்குரல்களை இனவாத குரலாக சித்தரிக்கும் போக்கு நீண்டகாலமாக இருக்கிறது. புதிய அரசும் இதேபோக்கைத்தான் கடைப்பிடிக்கிறது. தெற்கு இனவாத குரலான பொதுபலசேனாவிற்கு சமமாக வடக்கு முதல்வரின் கருத்துக்களையும் ஆய்வாளர்கள் ஒப்பிட்டு வந்தனர். இதனை மேலோட்டமான அபிப்பிராயங்களாக இதுவரை எடுத்தவர்கள் விழித்துக்கொள்ள வேண்டிய தருணம் இது.

இனவாதம் தொடர்பான தெளிவான பார்வை இந்த அரசிடம் இருக்கிறதா என்ற கேள்விகளை மேலே சொன்ன நிகழ்வுகள் ஏற்படுத்துகின்றன. இனவாத செயற்பாடு தீவிரமடைந்து வரும்போதும் அரசு மௌனமாக இருக்கிறது அல்லது அதை பார்த்துக் கொண்டிருக்கிறது. மாறாக வடக்கிலிருந்து எழும் நீதி குரல்களை கடும்போக்கு, இனவாத குரல்களாக சித்தரிக்கிறது.

தற்போது தெற்கில் மேலெழும் இனவாத அலையை சரியாக கையாள முடியாமல் அரசு தத்தளிக்கிறதென்பதே உண்மை. எதிர்க்கட்சிகள் எல்லாவற்றிற்கும் இனவாதம்தான் இலகுவாக கிடைக்கும் ஆயுதம் என்பதே இலங்கை வரலாறு. அதிலும், ஆட்சி செய்தாலும் இனவாதத்தையே ஆயுதமாக பாவிக்கும் மகிந்த போன்ற ஒருவர் எதிரணியில் இருந்தால் இனங்களிற்கிடையிலான ஐக்கியத்தை ஏற்படுத்துவதில் எவ்வளவு பெரிய சிக்கலென்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இனத்துவேசத்தை செய்பவர்கள் மீது கறாரான நடவடிக்கைகள் அவசியம். ஆனால் இது முள்ளிலிருந்து சேலையை எடுக்கும் நடவடிக்கைக்கு ஒப்பானதென்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். பல்லின நாட்டில், இனங்களிற்கிடையில் பதற்றம் நீடிக்கும் நிலையில் அதை சரி செய்வதென்பது மிகப்பெரிய பொறுப்பு. ஒவ்வொரு சம்பவங்களிற்கும் ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுப்பதென்பது அதிக சிக்கலானது. நிலைமையின் நெருக்கடியில் தவறான முடிவுகளை எடுக்காமல் தாமதித்து கொள்ளவும் வாய்ப்புண்டு. இனவாதத்திற்கு எதிரான செயற்பாட்டை சட்டமுறைகளினூடாக கையாளும் பொறிமுறையை உருவாக்கினால்தான் இந்தப்பிரச்சனையை இலகுவாக கையாளலாம்.

இனவாத செயற்பாடுகளிற்கு எதிரான கடுமையான சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். இன, மத துவேசம் செய்வது சட்டப்படி குற்றமென்ற நிலை உருவாகும்வரை இனவாதிகளை கட்டுக்குள் கொண்டுவர முடியாது. ஆகவே, உடனடியாக இனத்துவேசத்திற்கு எதிரான சட்டத்தை உருவாக்க வேண்டும்.

**தீபம்**
197, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633, 0214927561

ஆசிரியபீடம் : editor@deepam.lk ☎ 0214927562
சந்தா : subs@deepam.lk ☎ 0768255566
விளம்பரம் : sales@deepam.lk ☎ 0768255567
செய்திகளுக்கு : news@deepamnews.com

பத்திரிகை, இணையத்தளத்தில் செய்தியாளர்களாக செயற்பட ஆர்வமுள்ளவர்களிற்கு களங்கள் விரிந்துள்ளன. செய்தித்துறை ஆர்வம், புத்தாக்க திறனுள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளுங்கள்.
0768255562, editor@deepam.lk

# சொன்னார்கள்



**சுனில் ஹந்துன்நெத்தி**
**– எம்.பி. ஜேவிபி**
காணி உரிமையையே வடக்கு மக்கள் அரசியல் உரிமையாக கோரும் முதலாவது விடயமாக நான் கருதுகிறேன். இது அடிப்படை மனிதஉரிமையாகும். வசிக்கும் உரிமை, வீட்டுரிமை, வாழ்வதற்கான காணி உரிமை என்பன அடிப்படை மனிதஉரிமைகளாகும். இது அவர்கள் வாழ்ந்த காணி. பயிர்செய்கை மேற்கொண்ட காணி.



**டிலான் பெரேரா**
**– அமைச்சர்**
சுதந்திரக்கட்சியை பிளவுபடுத்தும் பசில், விமல் போன்றவர்களிற்கு விட அரச அனுசரணை கிடைக்கிறது. குமார் குணரட்ணத்தை தடுத்து வைத்துள்ள அரசு, போலி கடவுச்சீட்டு தயாரித்த விமலை பாதுகாப்பதன் மூலம் இது தெரிகிறது. பசிலின் மாளிகைக்கு யாரும் உரிமைகோர முடியாத நிலையேற்பட்டும் அவர் கட்சியை பிளவுபடுத்தும் முயற்சியில் ஈடுபடுகிறார்.



**வியாழேந்திரன்**
**– எம்.பி. தமிழ்தேசிய கூட்டமைப்பு**
இன்று அரச கம்பனிகளிற்கு லீசிங் மூலம் நிலத்தை கொடுக்கிறது. ஆனால் மக்களிற்கு கொடுக்க தயங்குகிறது. அரசிடம் லீசிங்கில் பெற்ற நிலத்தை நிறுவனங்கள் மக்களிற்கு லீசிங்கில் கொடுக்கின்றன. இன்று பாசிக்குடாவில் முன்னைய ஆட்சியிலிருந்தவர்களிற்கு எத்தனையோ நட்சத்திர ஹோட்டல்கள் உள்ளன. சஜின்வாஸ் 800 மில்லியன் பெற்று அங்கு நட்சத்திர ஹோட்டல் கட்டியுள்ளார். இன்று அந்த ஹோட்டல் வேறொருவரிடம் கைமாறியுள்ளது. பசில் ராஜபக்சவின் சொத்துக்களை பொறுப்பேற்கலாம் எனில், சஜின்வாஸின் சொத்துக்களை ஏன் அரசுடைமையாக்க முடியாது?



**பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா**
**– அமைச்சர்**
இலங்கையில் இராணுவம் இருக்க வேண்டும் என்பதற்காகவே வடக்கில் இராணுவம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. உண்மையில் வடக்கில் பொலிசாருக்கான தேவை மட்டுமே உள்ளது. இராணுவம் ஒரு இடத்தில் நிலைநிறுத்தப்பட வேண்டியது வேறு. ஆனால் இப்போது வடக்கில் இராணுவம் தேவையில்லை. சில சமயங்களில் இராணுவத்தின் தேவை இருக்கலாம். தேவையில்லாமலும் போகலாம். வடக்கில் இப்போது சமாதானம் நிலவுகிறது. ஆனால் இலங்கையில் எந்த இடத்திலிருந்தும் இராணுவத்தை அகற்ற வேண்டுமென யாரும் கோர முடியாது.



**சுரேஷ் பிரேமச்சந்திரன்**
**– ஈ.பி.ஆர்.எல்.எவ்**
பௌத்தர்கள் இல்லாத வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புத்த சிலையை நிறுவுவதோ அல்லது பௌத்த விகாரைகளை அமைப்பதோ தமிழர் தாயகப் பகுதிகளைப் பௌத்த சிங்கள மேலாதிக்கத்திற்குள் கொண்டு வருவதற்கான ஒரு செயற்பாடாகும். இலங்கை சுதந்திரமடைந்த காலப் பகுதியிலிருந்து புத்த விகாரைகளையும், சிலைகளையும் அரசாங்கம் கிழக்கு மாகாணத்திலும், வடக்கு மாகாணத்திலும் நிறுவி அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களுக்கு வழியேற்படுத்திக் கொடுத்துள்ளது.

தீபம் வாரஇதழில் முழுநேர தட்டச்சாளர் (பெண்கள்) தேவை. உடன் தொடர்புகொள்ளுங்கள். அலுவலக நேரங்களில் தொடர்புகொள்ளவும். 0768255562.

எந்த சீரியஸான விடயத்தையும் சிக்கலில்லாமல் நகைச்சுவையாக கிறுக்க ஆர்வமாக இருக்கிறீர்களா? அரசியல், சமூகம், ஆன்மீகம் எந்த எல்லையையும் தொடலாம். உடனே வரைய ஆரம்பியுங்கள். தரமானவை தீபம் வாரஇதழிலும், தீபம் இணையத்தளத்திலும் வெளியாகும். உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி
editor@deepam.lk

# கசிப்பு கோட்டை

## கல்லாறிலிருந்து ஒரு அதிர்ச்சி ரிப்போர்ட்

எஸ்.நிதர்சன்

கல்லாறு கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு சிறிய கிராமம். முறையான வீதி, குடியிருப்பு வசதிகள் இல்லாத ஒரு கிராமம். அதிக மக்கள் தொகையும் இல்லாதது. ஆனால் இன்று ஊடகங்களில் அதிகம் பேசப்படும் கிராமம். காரணம் கசிப்பு!

கிளிநொச்சி மாவட்டத்தின் கசிப்பு தலைமையகமாக மாறி வருகிறது கல்லாறு என்பதே இப்போதைய அதிர்ச்சி செய்தி. காரணம், கல்லாறில் முற்றுகையிடப்படும் கசிப்பு கோட்டைகள் பற்றிய செய்திகள் அடிக்கடி வெளியாகிக்கொண்டிருக்கிறது. [illegible]

[illegible]





[illegible]



இந்த கிராமங்களில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டது வெகு சிலர்தான். ஆனால் பாதிக்கப்படுவதென்னவோ கிராமம் முழுவதும்தான். காட்டுப்பகுதியில் காய்ச்சப்படும் கசிப்பு பின்னர் இரகசிய விற்பனை மையங்களிற்கு கடத்தப்படுகிறது. ஒரு பகுதி கசிப்பு தேடி வரும் வாடிக்கையாளர்களிற்கு விற்கப்படுகிறது. குறிப்பிட்ட சில வீடுகளிற்கு எந்த நேரம் சென்றாலும் கசிப்பு கிடைக்கும் என்பதை வாடிக்கையாளர்கள் தெரிந்து வைத்துள்ளனர். தூர இடங்களிலிருந்தும் கசிப்பிற்காக அங்கு வரும் குடிமக்கள் இருக்கிறார்கள். பொதுவாகவே கசிப்பிற்கு உள்ள சங்கேதப்பெயரான 'டீ'தான் இங்கும் பாவிக்கப்படும் பெயர்.

இப்படி இந்த மையம் கொண்டதற்கு சில காரணங்கள் உள்ளன. கல்லாறு அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய கிராமம். முறையான வீதியில்லை. குடிநீரில்லை. மாணவர்கள் பெரும் [illegible]

[illegible] கசிப்பு உற்பத்தி உள்ளிட்ட சட்டவிரோத செயல்களை நோக்கி தள்ளப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்கிறது.

கசிப்பு கோட்டையாக உருவெடுத்துள்ள கல்லாறை மீட்டெடுப்பது அதிகாரிகளின் கடமை. போதைக்கெதிரான முறையான செயற்திட்டமொன்று அங்கு சரியாக திட்டமிடப்பட்டு ஆரம்பிக்கப்பட வேண்டும்.



## திருந்தவே மாட்டாங்களா?

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னாருக்கு பயணிகளை ஏற்றிக்கொண்டு பயணித்த தனியார் மற்றும் அரச பேருந்துகள் மன்னார் பிரதான வீதியில் போட்டி [illegible]

[illegible]

வன்னிமது



# மதுவால் நடந்த கொலை

கிரைம் டயரி

மது நாட்டுக்கும் கேடு வீட்டுக்கும் கேடு என்பதை எத்தனை முறை சொன்னாலும் புரிந்து கொள்ளாதவர்கள் இருக்கவே செய்கிறார்கள். மதுவால் என்னவெல்லாம் நடக்குமென்றால்... எதுவும் நடக்குமென்பதே உண்மை. அதற்கு உதாரணமான சம்பவமொன்று அண்மையில் வவுனியாவில் நடந்துள்ளது.

ஆம். மதுபோதையில் ஒரு கொலையே நிகழ்ந்துள்ளது. வவுனியா பத்தினியார் மகிழங்குளத்தில் வசித்து வந்த வெளிநாட்டுவாழ் இலங்கையர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவமே அது. நான்கு பிள்ளைகளின் தந்தையான விக்கிரமரட்ண குணசிறி (59) என்பவரின் கொலை தொடர்பான விசாரணைகள் தீவிரமாக நடந்துவரும் நிலையில், பொலிசார் நடத்திய இதுவரையான தீவிர விசாரணையில் வெளியான தகவல்களின் சுருக்கமே இது.

கொல்லப்பட்ட குணசிறி இலங்கை பொலிஸ் சேவையில் கடமையாற்றியவர். 1983ம் ஆண்டு வரை கடமையாற்றிவிட்டு, பொலிஸ் திணைக்களத்தின் அனுமதியின்றியே சேவையிலிருந்து விலகினார். உடனடியாக ஜேர்மனிற்கு குடிபெயர்ந்து அங்கு மனைவி பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்தார்.

[illegible]







HOTEL FEATURES

24Hr Room Service | Garden | Wi Fi | LCD Tv with International Channels | Tea / Coffee Maker | Complete Room Amenities | Complete Bathroom Amenities | Rent a Cars, Motor Bike & Bicycle Facilities

Luxury Room | Semi - Luxury Room | A/C Room | Non A/C Room

No. 86, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
Tel : +94 21 221 7770 | Fax : +94 21 221 7727 | Mobile : +94 77 256 1990
E-mail : stationgardenmotel@gmail.com



# காணாமல் போகும் திருக்கோவில்

அம்பாறையின் திருக்கோவில் பிரதேசம் கடலரிப்பால் முற்றிலும் காணாமல் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதிகம் கவனிக்கப்படாமல் மெல்ல மெல்ல கிழக்கின் கரையொன்று காணாமலேயே போய்க்கொண்டிருக்கிறது. தம்பிலுவில் முதல் வடிவேல் கட்டுக்கரைப்பகுதி தொடக்கம் விநாயகபுரம் வரையிலான 03 கிலோமீற்றர் பிரதேசம் விரைவில் காணாமலேயே போகும் அபாயம் உருவாகியுள்ளது.

கடந்த சில வருடங்களின் முன்னர்தான் கடலரிப்பு ஆரம்பித்தது. தற்போது சுமார் 100 மீற்றர் தூரம் கரைக்குள் கடல் புகுந்துவிட்டது. அது ஒரு அபாய அளவு என்றும், இதுவொரு தற்காலிக கடலரிப்பு, அஞ்சத் தேவையில்லையென அதிகாரிகள் கூறிவருகின்றனர். ஆனால் நிலைமை அவ்வளவு நல்லதாக இல்லை. கொஞ்சம் கொஞ்சமாக திருக்கோவிலிலுள்ள வரலாற்று சிறப்புமிக்க ஆயிரம் வருட பழமையான சித்திரவேலாயுத சுவாமி ஆலயம்கூட இப்பொழுது காணாமல் போகும் அபாயத்தை சந்தித்துள்ளது. அரசு வாசிதமான அறிவித்தலும் வரவில்லை. தேவையேற்படின் இதுவும் ஒன்று ஆலயத்தைச் சூழவுள்ள பெறுமதியான குடிமனைகளும் கடலுடன் போய்விடலாம்.

ஆலயத்திற்கு அப்பாலிருந்த வீடுகள், குடியிருப்புகள், தென்னந்தோப்பு இவை யாவும் என பலவும் கடலுக்குள் சென்று விட்டன. ஆலயத்தின் தீர்த்தமாடும் பிரதேசம் கடலால் காவுகொள்ளப்பட்டுள்ளது. அதனை நம்பி வழிபடும் பிரதேசமும் பாதிக்கப்பட்டுள்ளது.

திருக்கோவிலின் இந்த கடலரிப்பிற்கு ஒலுவில் துறைமுகம் அமைக்கப்பட்டதே காரணமென சொல்லப்படுகிறது. முறையான திட்டமிடலின்றி ஒலுவில் துறைமுகம் அமைக்கப்பட்டதன் விளைவை திருக்கோவில்தான் செலுத்துகிறது என அந்த பகுதி மக்கள் குமுறுகிறார்கள். ஒலுவில் துறைமுகம் அமைக்கப்பட்டதன் பின்னர் கடல் காவு கொண்ட நிலங்கள் ஏராளம். முதலில் ஒலுவில் பகுதியே கடலரிப்பிற்கு இலக்கானது. துறைமுகத்தை அண்டிய 800 மீற்றர் நிலம் காணாமலேயே போய்விட்டது.

2004ம் ஆண்டு ஆழிப்பேரலைக்கு முன்பு பயன்பட்டு வந்த திருக்கோவில் மயானமும்டான் கடற்கரை வீதி கடந்த வருடங்களில் பாரிய மாற்றங்களில் முற்றாக அரிக்கப்பட்டு மண்மூடி கிடக்கிறது. தற்போது எந்த சுவடுமில்லாமல் போய்விட்டது.

ஆழிப்பேரலைக்கு பின்னர் மண் இடமாற்றப்பட்டு, அதனால் விரைவான கடலரிப்பு நிகழலாமென்ற அபிப்பிராயமும் உள்ளது. எனினும், அது உறுதியாகவில்லை. சமநிலை குலைந்தாலும் தம்மைத்தாமே மீளமைத்துக்கொள்ளும் வல்லமை எல்லா சூழல்தொகுதிகளிற்கும் உள்ளது. ஆனால் இந்த கடலரிப்பை தடுக்க முடியவில்லையே!

இதனால்தான் ஒலுவில் துறைமுகம் காரணமாக இருக்கலாமென கருதப்படுகிறது. ஒலுவில், திருக்கோவில் போன்ற அதிகம் பாதிக்கப்படும் சில பகுதிகளின் பெயரை மட்டும் குறிப்பிட்டாலும், உண்மையில் கிழக்கில் சம்மாந்துறை முதல் நிந்தவூர் வரையான நூறளவு கிலோமீற்றர் நீள கரையோரம் அரிக்கப்பட்டு கொண்டிருக்கிறது.


இதுபற்றி திருக்கோவில் பிரதேச செயலரிடம் கேட்டபோது "கடலரிப்பு பற்றி கரையோர திணைக்களத்திற்கு அறிவித்தோம். திணைக்களத்தின் பொறுப்பில் பிரதேச உதவிப்பணிப்பாளர் நேரில் வந்து பார்வையிட்டார். இது தற்காலிக கடலரிப்பு என கூறினார். எமது செயலகத்தில் நிரந்தரமான கரையோர பாதுகாப்பு இணைக்கள உத்தியோகத்தர் இல்லை. அதுவும் பாதிப்புத்தான்" என்றுள்ளார்.

இதேவேளை, இந்தப்பகுதிகளில் அதிகரித்துள்ள சட்டவிரோத மண் அகழ்வும் கடலரிப்பு விரைவாக நடக்க காரணமாகிறது. மண் அகழ்பவர்களால் உருவாக்கப்படும் பெரிய பள்ளங்களை நோக்கி கடல் விரைவாக உள்நுழைந்துவிடுகிறது. இதனால் சட்டவிரோத மண் அகழ்பவர்களை தடுக்க வேண்டிய பொறுப்பும் உள்ளது.

**கடலரிப்பை தடுக்கும் பொறுப்பு அதிகாரிகளிற்கு மட்டும் உரியதென பிரதேச மக்கள் ஒதுங்கிவிட கூடாது. உங்கள் பகுதிகளில் சட்டவிரோத மண்அகழ்வு நடந்தால் முதலில் அதை தடுத்து நிறுத்துங்கள். அடுத்து, மண்அரிப்பை தடுக்கும் கடற்றாவரங்களை கரையோரத்தில் நடலாம். இதற்கு தன்னார்வ அமைப்புக்களின் உதவியை பெறலாம். அதிகாரிகளும், மக்கள் பிரதிநிதிகளும் அசமந்தமாக இருந்தால், மக்களின் இந்த நடவடிக்கை ஒரு சூடாக இருக்கும்!**

சித்திரவேலாயுதசுவாமி ஆலயத்திற்கு அருகில் ஒரு மாதத்தின் முன் இருந்த கிணறு இன்று கடலிற்குள் சென்றுவிட்டது. ஒரு மாதம் ஊரில் இல்லாமல் இருப்பவர் திரும்பி வந்தால் கிணற்றை காணவில்லையென்றுதான் மீள வேண்டும். மயானமும் பாதிக்கப்பட்டு, புதைக்கப்பட்டிருந்த மண்டையோடுகளையும் கடல் வெளியில் எடுக்கிறது. திருக்கோவில் முதல் கோமாரி வரையான பகுதிகளே கடுமையான பாதிப்பிற்குள்ளாகியுள்ளதாக மக்கள் கூறுகிறார்கள்.

கடலரிப்பை தடுப்பது அத்தியாவசியமானது. மக்கள் பிரதிநிதிகள், அதிகாரிகளின் பொறுப்பு அது. அவர்கள் தூங்கும்வரை காத்திருக்காமல், அவர்களை விழித்தெழ செய்யலாம் மக்கள்!



▶ திருகோணமலை வடக்கு கல்வி வலயத்திற்குட்பட்ட றொட்டவெவ முஸ்லிம் வித்தியாலயம், நொச்சிக்குளம் தமிழ் வித்தியாலயங்களுக்கு மாகாண மட்ட பொதுப்பரீட்சைக்கான வினாத்தாள்கள் தனி சிங்களத்தில் அனுப்பப்பட்டுள்ளன.



▶ மகிழூர்முனை விஷ்ணு ஆலயத்தின் கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீட்டு விழா அண்மையில் ஆலயத் தலைவர் ஆசிரியர் ந.பரீந்திரன் தலைமையில் இடம்பெற்றது. ஆலயத்தின் சங்காபிஷேக நிகழ்விலேயே இந்நூல் வெளியிடப்பட்டது. இந்நிகழ்வில் களுவாஞ்சிக்குடி பிரதேசசெயலாளர் மு.கோபாலரெத்தினம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

பி.சிவா


'இளமைக்காலம் இல்லை கடலுக்கு இடையில் பறிக்கப்பட்டது. யுத்தம் யாரைத்தான் விட்டு வைத்தது. வடக்கு கிழக்கில் வாழும் ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு துன்பத்திற்கு இலக்கானவன்தான். 19வயது தொடக்கம் கடற்தொழில் நம்பி வாழ்பவன். தொழிலுக்கு செல்லும்போது கண்ணிவெடி என் கால்களை பறித்தது. அப்போது எனக்கு பத்தொன்பது வயது. ஆனால் சோர்ந்துவிடவில்லை. திருமணம், பிள்ளைகளிற்கு பாதுகாப்பான வாழ்க்கை. திரும்பிப்பார்க்கும்போது வாழ்க்கை சுகமாகத்தான் இருக்கிறது' என சிரிக்கிறார் மனோகர்.

நான் யாரையும் எதிர்பார்த்து வாழ விரும்பாதவன். என் சொந்த உழைப்பில் உயர விரும்புபவன். அதனால்தான் கால் இல்லாமல் போனாலும் எனக்கு பெரிதாகப்படவில்லை. 23 வயதில் திருமணம் செய்தேன். என் மனைவிக்கும் சிறு வயதில் நரம்பு தளர்ச்சி வந்து ஒரு கை இயக்கம் இல்லை. ஆனால் எங்களை மனத் தைரியம் வழிநடத்தியது. மீண்டும் எழுந்து கடல் தொழிலை செய்ய தொடங்கினேன். எனது உழைப்பேன் எனது உழைப்புதான் என்னை இன்றைக்கு நல்லா வைச்சிருக்கு. குடிப்பழக்கம் இல்லை.

அடுத்தால் எனக்கு விளையும் ஆபத்துக்களையும் என் குடும்பம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அறிவேன். இரண்டு பெண் பிள்ளைகளை வீட்டில் வைத்துக் கொண்டு குடிகாரனாக இருந்தால் அது அவர்களிற்கு செய்யும் துரோகம். மற்றவர்களை நாலும் என் குடும்பமும் எதிர்பார்ப்பது தவறு. எமது உழைப்பு தான்

# 'பணம் சம்பாதிக்க கடற்தொழிலே சிறந்தவழி'

## தன்னம்பிக்கை மனிதர் மனோகர் சொல்கிறார்



நிலையானது என்று உணர்ந்தால் உணர்வே என்னை முன்னேற்றி செல்கின்றது.

அடுத்தவன் தாவிலை என்று குறை கூறிக்கொண்டு இருந்தால் நாங்கள் இப்படியே தான் இருக்க வேண்டும். சொந்த உழைப்பும் முயற்சியும் மட்டுமே ஒரு மனிதனை வெற்றியாளனாக்கும் என்பதை எல்லா மக்களும் உணர வேண்டும்.

அதற்காக நான் காரணமடைந்த உதவியும் இல்லாமல் வாழ்பவன் என்று கூறவும் முடியாது. அரசாங்கத்தால் கிடைக்கும் உதவிகளை கொண்டு தொழிலை விருத்தி செய்கிறேன்.

எங்கள் ஊருக்குள் வாழும் 750க்கு மேற்பட்ட மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் தான் வாழ்கின்றனர். ஒருவேளை சோற்றுக்காக ஏங்கியிருக்கும் பல குடும்பங்களை கண்டு அவர்களுக்கு என்னால் முடிந்ததை செய்ய முடிகிறது. ஒரு சிலருக்கு செய்வதால் எல்லோருக்கும் செய்ய அரசு வசதி எங்களிடம் இல்லை. நாங்களும் தங்கியிருக்கும் அன்றாட உழைப்பு கிடைக்கும் சாப்பிட்டு மிஞ்சுவதை சேமித்து வேண்டிய எடுத்து அதைக்கொண்டு நோக்கமாக உழைத்து கட்டி வாழ்ந்து வருகின்றோம். என் உழைப்பில் வீடு, மதில் கட்டி, தேவையான பொருள் வாங்கியுள்ளேன். ஒரு குடும்ப தலைவனாக சரியாக நடந்துள்ளேன்.

இடப்பெயர்வு காலம்தான் கஷ்டப்பட்டு நெருக்கடிப்பட்டோம். ஆனால் அந்த நேரத்திலும் துணிவுடன் மீண்டெழுந்து விரைவில் மீண்டும் அரிசியில் பிள்ளைகளுக்கு கஞ்சி காய்ச்சி கொடுத்திட்டு நாங்கள் சாப்பிடாமல் இருந்துள்ளோம். ஆனால் எங்கள் இடம் விடுவிக்கப்பட்ட பின்னர் பழைய சந்தோச வாழ்க்கையை உருவாக்கிவிட்டேன்.

ஆண் பிள்ளை ஒருவர் படிக்கிறார். மற்றவர்கள் தொழிலுக்குதான் வருவார்கள். ஒரு பெண் பிள்ளைக்கு திருமணம் செய்து வைத்து விட்டேன்.

எங்களுடைய வீதியை புனரமைப்பு செய்வித்தது நான்தான். வீதி புனரமைப்பில் எனது கை காசில் வேலையாளர்களுக்கு சாப்பாடு, தேனீர் என்று 25000 செலவு செய்துள்ளேன். மூன்று தடவைகள் மீனவர் சங்கத்தில் தலைவராக இருந்து பல நிறுவனங்களிடம் இருந்தும் மக்களுக்கு உதவிகளை பெற்று கொடுத்துள்ளேன்.

என்னை பொறுத்த வரையில் எல்லா தொழில்களிலும் சிறந்த தொழில் கடல் தொழில்தான். பிழைக்க தெரியாதவர்கள் உழைக்க சோம்பேறி பிடித்தவர்களே கடல் தொழிலை நிராகரிப்பவர்கள். உழைத்து வாழ விரும்புபவர்களும் சம்பாதித்து பணக்காரன் ஆக விரும்புபவனும் கடல்தொழிலை கற்று




காலம் பார்த்து வலை வீசி சிறப்பாக செய்வான். நான் அப்படிதான் செய்கிறேன். அதை கற்று கொடுக்கவும் தயாராக தான் உள்ளேன். ஆனால் மற்றவர்களிடம் கேட்டறிந்து கற்று தொழிலை செய்யும் பக்குவத்தை இளைஞர்களும் வளர்த்து கொள்ள வேண்டும். தொழிலை நிராகரிக்காது செய்ய கற்று கொள்ள வேண்டும்.

மக்களுக்காக ஏதாவது செய்ய வேண்டும். என்னை சூழவுள்ள இந்த மக்களையும் நான் நன்றாக வைத்து பார்க்க வேண்டும். இன்னமும் எமது மக்கள் பலருக்கு சுய தொழில் இல்லை. அதனை பெற்று கொடுக்க வேண்டும். பெண்கள் உழைக்க அது சிறந்த வழி. வீடுகள் இல்லாமல் அவதிப்படுகின்றனர். குடிநீர் பிரச்சினை. இப்படி எமது சமூக பிரச்சினைகளை சொல்லி கொண்டே போகலாம். அவற்றை எல்லாம் நீக்கி எமது மக்கள் சிறப்பாக வாழ வழி சமைக்க வேண்டும். அதற்காக அரசியலில் குதிக்கும் எண்ணமும் உள்ளது என சிரித்தார் மனோகர்.

ஒரு தன்னம்பிக்கை மனிதரிடம் பேசிய திருப்தியில் விடைபெற்றோம்.



கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கிருஸ்ணபிள்ளை துரைராசசிங்கம் இளைஞர்களுக்கான சுயதொழில் ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு அமைச்சின் மட்டக்களப்பு அமைச்சு காரியாலயத்தில் இடம்பெற்றது.



செட்டிக்குளம் ஆசிரிய மத்திய நிலையம் புனரமைப்புக்காக ஒதுக்கப்பட்ட நிதி, கட்டட புனரமைப்பு செய்யப்படாமலே வழங்கப்பட்டுள்ளதென்ற அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. வவுனியா தெற்கு பாடசாலை வேலைகள் பொறியியலாளர் 09.11.2016 அன்று வலயக்கல்வி பணிப்பாளருக்கு எழுதிய கடிதத்திலேயே இதனை தெரிவித்துள்ளார். ஆசிரிய மத்திய நிலையம் புனரமைப்பு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட 372,779.00 ரூபா ஒப்பந்த வேலைகள் செய்யப்படாத போதும் அதற்கான கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது என அதிர்ச்சி தகவலை கணக்காய்வு திணைக்களம் வெளியிட்டுள்ளது.






# கூகுள் சேர்ச் லேட்டஸ்ட் அப்டேட் மூலம் கூட்ட நெரிசலை கண்டறிவது எப்படி?

கூகுள் அதன் தேடல் இயந்திரத்தின் பயனாளர் அனுபவம் அளிக்க கடுமையாக உழைத்து வருவது நன்றாகவே தெரிகிறது மற்றும் உடன் ஒவ்வொரு புதிய மேம்படுத்தலும் அறிமுகம் செய்யப்படும் அம்சம் ஆனது புதுமையான ஒன்றாகவும் சிறப்பாக செயல்படும் ஒன்றாகவும் இருந்து வருகிறது. முன்னதாக கூகுள் வெவ்வேறு நேரங்களில் வெவ்வேறு கடைகளில் ஷொப்பிங் செய்யும் அம்சமான பொப்புலர் டைம்ஸ் என்ற புதிய அம்சத்தை [illegible] மற்றும் கூகுள் தேடலில் அறிமுகம் செய்தது. இப்போது, கூகுள் நிறுவனம் குறிப்பிட்ட இடத்தின் நிகழ் நேரத்தில் எவ்வளவு கூட்ட நெரிசல் நிலவுகிறது என்பது சார்ந்த தகவல்களை சேர்க்கும் அம்சம் ஒன்றை மேம்படுத்தியுள்ளது.

[illegible]

இந்த அம்சம் [illegible] மற்றும் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு எப்போது எந்த நேரத்தில் செல்ல வேண்டும் என்பதை முடிவு செய்ய உதவுகிறது. மிக முக்கியமாக பெரிதும் நெரிசலான இடங்களை தவிர்க்க இந்த அம்சம் மேம்படுத்தப்பட்டுள்ளது. இந்த புதிய அம்சம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் எவ்வளவு [illegible] பயன்பாட்டு கொண்டு தகவல் அளிக்கும்.

[illegible]



# நொக்கியா அண்ட்ரோய்ட் ஸ்மார்ட்போன் லீக் ஆன தகவல்கள்!

2017 ஆம் ஆண்டு முதல் ஸ்மார்ட்போன் சந்தையில் மீண்டும் களமிறங்க இருப்பதை நொக்கியா நிறுவனம் சில நாட்களுக்கு முன் உறுதி செய்தது. இந்நிலையில் நொக்கியா அண்ட்ரோய்ட் கருவி பிளாக்ஷிப் போன் என்ற ரீதியில் பல தகவல்கள் அவ்வப்போது வெளியாகின. தற்சமயம் வெய்போ எனும் இணையத்தளத்தில் நொக்கியா போன் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன. இதில் கருவி 2017 ஆம் ஆண்டு வெளியாகும் என்பது உட்பட சில முக்கிய அம்சங்கள் குறித்த தகவல்களும் கசிந்திருக்கின்றன.

வெய்போ போஸ்ட் தகவலில் 5.2 இன்ச் மற்றும் 5.5 இன்ச் என இரு அளவு டிஸ்ப்ளே மற்றும் 2கே ரெசல்யூஷன் கொண்டிருக்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்னாப்டிராகன் 820 சிப்செட் கொண்டு இயங்கும் என்றும் இத்துடன் 4 ஜிபி ரேம் வழங்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நொக்கியா பிளாக்ஷிப் கருவிகளில் பிரபல Carl Zeiss பிராண்டிங் கொண்ட கமரா வழங்கப்படுமாம். இதே போன்ற கமரா தான் பழைய [illegible] லூமியா கருவிகளிலும் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு பழைய தகவல்களில் நொக்கியா ஸ்மார்ட்போன்கள் பல்வேறு நிறங்களில் வெளியாகும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் இவை மேட்டர் மற்றும் டல் ஃபினிஷ் கொண்டிருக்கும் எனத் தெரியவந்துள்ளது.

அதிகம் எதிர்பார்க்கப்படும் நொக்கியா ஸ்மார்ட்போன்கள் புதிய அண்ட்ரோய்டு பதிப்பான நௌகட் இயங்குதளம் கொண்டிருக்கும் எனக் கூறப்படுகிறது.




ஐபோனில் வழிமுறை 01


அண்ட்ரோய்ட் வழிமுறை 01


ஐபோனில் வழிமுறை 02



அண்ட்ரோய்ட் வழிமுறை 02

# உங்களின் வட்ஸ்அப் ரிங்டோன் மாற்றுவதற்கான எளிய தந்திரம்.!

வட்ஸ்அப் அதன் வொய்ஸ் கோல் அம்சத்தை அறிமுகம் செய்து சில மாதங்கள் ஆகிற நிலையில் சமீபத்தில் அதன் புதிய வீடியோ கோல் அம்சத்தையும் அறிமுகம் செய்தது. ஆனால், புதிய வீடியோ கோலிங் அம்சத்தில் நம் தேவைகளுக்கு ஏற்ப சில அமைப்புகளை அமைத்துக்கொள்ள முடியும் என்பது பற்றி உங்களுக்கு தெரியுமா?

உதாரணமாக, வட்ஸ்அப் ஆனது உங்களுக்கு உள்வரும் அழைப்புகள் மற்றும் செய்திகளுக்கு வெவ்வேறு ரிங்டோன்கள் [illegible]

[illegible] ரிங்டோனை மாற்றுவதற்கான எளிய தந்திரம் இதோ!

ஐபோனில்..

**வழிமுறை 01:** [illegible] கொண்டெக்ட் அப்பிறகு செல்லவும். உங்களுக்கு விருப்பமான ரிங்டோனைத் தேர்ந்தெடுக்க விரும்பும் தொடர்பை தேர்வு செய்யவும்.

**வழிமுறை 02:** இப்போது திரையின் மேல் [illegible] பின்னர் ஒரு ரிங்டோன் தேர்வு செய்து [illegible] செய்யவும்.

பின்குறிப்பு [illegible] தொடர்புகளுக்கான ரிங்டோன் அமைக்க [illegible] செல்லவும்.

அண்ட்ரோய்டில்..

**வழிமுறை 01:** [illegible]

**வழிமுறை 02:** [illegible] முடியும்.

## விமலின் புது வாய்ப்புக்கள்

இளம் நாயகர்களில் ஒருகாலத்தில் பிஸியாக இருந்தவர் விமல். 2014இல் அவரது ஆறு படங்கள் வெளியானது. ஆனால் எல்லாம் வரிசையாக தோல்விப்படங்களாக, இப்போது வெட்டியாக இருக்கிறார். கடந்த இரண்டு வருடத்தில் அவரது நடிப்பில் வந்தது மொத்தம் மூன்று படங்கள்தான். ஆனால் திடீரென இப்பொழுது மீண்டும் அவரது காட்டில் மழை. ரெண்டாவது படம், மன்னர் வகையறா, சுசீந்திரன் தயாரிப்பில் ஒரு படம், ராஜதந்திரம் பட இயக்குனரின் புதுப்படம் என சில படங்களில் நடிக்கிறார். இவையெல்லாம் திட்டமிட்டபடி வெளியானால் 2014ஐ போலவே 2017ம் விமலுக்கு ராசியான ஆண்டாக அமையும்.

## த்ரிஷா, ஹன்சிகாவை சுத்தமாக்கிய ஆசாமி

மொபைல் போன்களை ஹேக் செய்யும் சில இணையத்தளங்கள் உள்ளன. அப்படியான வாய்ப்பை பயன்படுத்தி, த்ரிஷாவின் மொபைல் இலக்கத்தை தெரிந்த யாரோ அவரது போனிற்கு வைரஸ் அனுப்பி மொத்தமாக அனைத்தையும் செயலிழக்க செய்து விட்டனர். த்ரிஷாவின் போனிலிருந்து அனைத்து எண்களையும் இழந்துவிட்டார். இதனால் த்ரிஷா கடுப்பாகி, "என்னுடைய நம்பர் தெரிந்த நண்பர்களே, வட்ஸ்அப் மூலம் உங்கள் இலக்கங்களை அனுப்பி வையுங்கள். வேலையில்லாத ஒரு கோழை என போனை துடைத்து சுத்தம் செய்துவிட்டான்" என ருவிட் செய்துள்ளார். இதைபார்த்த ஹன்சிகா, "எனக்கும் அப்படித்தான் நடந்துள்ளது. தயவுசெய்து உங்கள் இலக்கத்தை அனுப்பி வையுங்கள்" என ருவிட்டியுள்ளார்.

## ஈர்க்கும் சஞ்சிதா!

சஞ்சிதா ஷெட்டி கன்னடத்திலிருந்து தமிழுக்கு இறக்குமதியானவர். கொள்ளைக்காரன், சூதுகவ்வும், பீசா 2 படங்களில் நடித்தார். தற்போது கைநிறைய படங்கள் வைத்துள்ளார். வழக்கமான நாயகிகளை போலல்லாமல் நடிக்கும் நாயகியாக இருக்கிறாராம். சக நடிகைகளுடனும் ஈகோ இல்லாதவராக பழகுகிறார். எவ்வளவு பெரிய ரேக் என்றாலும் நன்றாக பயிற்சி எடுத்து சிங்கிள் ரேக்கில் ஓகே சொல்ல வைக்கிறாராம். திறமை மட்டுமல்ல உடல்அழகும் முக்கியம், அது இருக்கும்வரைதான் நமக்கு மரியாதையென சக நடிகைகளிற்கு ஆலோசனையும் சொல்கிறாராம். சாப்பிடாமல் நிற்பவர்களை சாப்பிட சொல்லியும், வெயிலில் நிற்பவர்களை நிழலில் நிற்கச்சொல்லியும் பாசத்தோடு நடந்து கொள்வதால் சக நடிகர், நடிகைகள் மத்தியில் அவரது செல்வாக்கு உயர்கிறதாம்.

## சிலிர்த்த சிம்பு!

நீண்டநாளின் பின் திரைக்கு வந்துள்ளது சிம்புவின் அச்சம் என்பது மடமையடா. வழக்கமான சிம்பு படத்தை போலல்லாமல் இதற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. சென்னையிலுள்ள தியேட்டர் ஒன்றில் ரசிகர்களுடன் உட்கார்ந்து சிம்பு படம் பார்த்துள்ளார். "நிறைய பிரச்சனைகளை கடந்து வந்த இந்தபடம் வெற்றியடைந்துள்ளது. நல்ல வசூலையும் ஈட்டியுள்ளது. இதற்கு ரசிகர்கள்தான் காரணம். நிறைய பிரச்சனைக்கு பின்னரும் எல்லாதரப்பினரும் படம் பார்க்க வந்தது தனது மனதை உருக்கிவிட்டது" என்றுள்ளார்.



# ரீல் டாக்கீஸ்

## அனுஷ்காவின் அழகு ரகசியம்

[illegible]

## அமைராவின் அடுத்த இன்னிங்ஸ்

[illegible]

## மல்லிகாவிற்கு நேர்ந்த கதி!

[illegible]



தொகுப்பு: ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்.** எல்லோருக்கும் உதவும் நல்ல உள்ளம் கொண்டவர். என்றாலும், சில நேரங்களில் சிலரால் அவர் தவறாக புரிந்து கொள்ளப்பட்டார். [illegible]

# சந்திரபாபு நட்பு




பரிசு படப்பிடிப்பு இடைவேளையில் எம்.ஜி.ஆர்., சாவித்திரியுடன் ரஷ்ய நாடகக் குழுவினர்.

[illegible]



அரசகட்டளை படப்பிடிப்பில் அண்ணன் சக்ரபாணியுடன் ஆலோசிக்கிறார் எம்.ஜி.ஆர்.



புதுமைப்பித்தன் படத்தில் எம்.ஜி.ஆர்., சந்திரபாபு

**தனது பழைய நண்பர் கஷ்டப்படுவதைப் பொறுக்காத எம்.ஜி.ஆர், 'பறக்கும் பாவை', 'கண்ணன் என் காதலன்', தனது சொந்தப் படமான 'அடிமைப் பெண்' ஆகிய படங்களில் சந்திரபாபுவுக்கு நடிக்க வாய்ப்புகள் அளித்து அவருக்கு கணிசமான தொகையையும் ஊதியமாக அளித்தார்.**



[illegible]

தொடரும்...

‘எதற்காக எமது அங்கங்களை இழந்தோமோ அந்த இலட்சியம் ஈடேறவில்லை. அதன் வலி ஒரு புறம் என்றால், அங்கங்களை இழந்த எம்மைப் போன்றவர்களை சமூகம் கேலியாகவும், இளக்காரமாகவும் பார்ப்பது இன்னும் வேதனையை கொடுக்கிறது’ என்கிறார் ஜீவராசா.

மட்டக்களப்பு மகிழடித்தீவு பகுதியை சேர்ந்தவர். மகிழடித்தீவு நேதாஜி என்றும் அழைக்கப்படுகிறார் ஜீவராசா. மக்களிற்காக போராட்டத்தில் இணைந்து அங்கங்களை இழந்தவர்கள் சமூகத்தில் கேலியாக பார்க்கப்படுவது ஒருபுறம் என்றால் தொழில் வாய்ப்புக்கள் இல்லாதது அடுத்த பெரிய பிரச்சனை என்கிறார் ஜீவராசா.

மகிழடித்தீவு ஜீவராசா 1995ம் ஆண்டு தன்னை விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைத்துக் கொண்டு செயற்பட்டார். 1996இல் காயமடைந்து கையொன்று அகற்றப் பட்ட பின்னர் விடுதலைப்புலிகளின் அரசியல்பிரிவில் செயற்பட்டுவந்துள்ளார். இறுதியுத்தத்தில் படையினரிடம் சரணடையுமவரை மட்டக்களப்பு மகளிர் பிரிவு பொறுப்பாளர், மட்டக்களப்பு விளையாட்டுத்துறை பொறுப்பாளர், கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்





பாளர் என பலவேறு பொறுப்புக்களை வகித்துள்ளார்.

இறுதியுத்தசமயத்தில் மீண்டும் படுகாயமடைந்தார். மனைவி, பிள்ளைகளுடன் படையினரிடம் சரணடைந்து, புனர்வாழ்வின்பின்னர் சமூகத்துடன் இணைக்கப் பட்டுள்ளார். அவருக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர்.

‘நாங்கள் விடுதலையாகி வந்து ஏழு வருடங்கள் கடந்த நிலையிலும் இந்த வீட்டினைத்தவிர எங்களுக்கு எதுவிதமான அரசாங்க உதவிகளோ, நிறுவனங்களின் உதவிகளோ எங்களுக்கு கிடைக்கவில்லை. இந்த சின்ன பெட்டிக்கடையை வைச்சிக் கொண்டுதான் அன்றாட வாழ்க்கை போயக் கொண்டிருக்கின்றது. இப்ப இந்தக் கடையிலயும் சமான் எடுக்க காசு இல்லை. நாங்க நம்பி வாக்குப்போட்ட கூட்டமைப்பும் திரும்பியும் பாக்குதில்லை.

# ‘கை கோர்ப்போம்’

# ‘அண்ணனுடன் இருந்தபோது வலிக்கவில்லை’



தீபம் ஆரம்பித்துள்ள புதிய அத்தியாயம் கை கோர்ப்போம். இதுவொரு மனிதாபிமான பணியென்பதை விடவும் சமூக அக்கறையுள்ள ஒவ்வொருவரும் இணைந்து கொள்ள வேண்டிய அத்தியாவசிய பணி. யுத்தம் நின்று மக்களிற்கான உதவிகள் முறையாக சென்றடையாத அவலம் நீடித்து வருகிறது. ஒவ்வொருவரும் சிறைதாக விரல் நீட்டினாலே விழுந்து போயுள்ளவர்கள் பற்றிப்பிடித்து நடக்க ஆரம்பித்துவிடுவார்கள். யுத்தம் வீழ்த்திய மனிதர்களை எழுந்து நடக்க வைக்க வேண்டுமென விரும்புபவர்களில் ஒருவரா நீங்கள்? நீங்கள் செலவிடும் பணத்தின் ஒரு துளியேனும் நல்ல காரியங்களிற்கு செலவிட விரும்புபவர்களில் ஒருவரா நீங்கள்? உங்களின் ஒரு சதமும் ஓராயிரம் புன்னகையை மலர்விக்க விரும்பினால் தீபத்துடன் கை கோர்த்துக் கொள்ளுங்கள்.

தொடர்பு முகவரி:
‘கை கோர்ப்போம்’, தீபம் வார இதழ், 197, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

அங்கவீனமானவர்களுக்கான கொடுப்பனவும் 3000 ரூபாவும் இல்லை. இதையும் கூட பெற்றுத்தாறதுக்கு யாரும் முன்வாறதில்லை. அண்ணனுடன் இருக்கும் போது வலிக்கவில்லை. இப்போது அனைத்தும் வலிக்கின்றது. அவருடன இருக்கும் போது சந்தோசமாக வாழ்ந்தோம். ஆனால் இப்ப நிம்மதி இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கும்’ என்கிறார்.

‘எனது மகன் தரம் 04இல் கல்விகற்று வருகின்றார். ஏனைய தகப்பன்மார் தங்களுடைய பிள்ளைகளுக்கு தேவையானவற்றை வாங்கிக்கொடுக்கும் போது என்னால் அவ்வாறு முடியவில்லை. ஆனால் அண்ணனுடன் வாழும்போது அதற்கான ஏற்பாடுகள் கிடைத்தது.

நான் அங்கவீனமானவன் என்பதை இந்தச் சமூகம் சுட்டிக்காட்டுகின்றது. இதனால் எனது பிள்ளைகள் மனவேதனையடைகின்றன. நான் கையை இழந்தது ஒரு உயரிய நோக்கத்திற்கான பயணத்தில். இதற்காகவே என்னைப்போன்ற பல்லாயிரக் கணக்கானவர்கள் இந்தநிலையை அடைந்தனர். தமிழ் சமூகத்திற்கு தயவான வேண்டுகோள். எங்களை அவ்வாறு இனியும் சுட்டிக்காட்ட வேண்டாம்’ என மிகவும் மனவேதனையுடன் தெரிவித்தார்.

புதுகாமத்தில் வாழ்ந்துவரும் ஜீவராசா தற்போது சிறிய பெட்டிக்கடையொன்றை நடத்தி வருகிறார். தற்போது பெட்டிக் கடையை கைவிடும் நிலைக்கு வந்துவிட்டதாக சொல்கிறார். யாராவது உதவும் உள்ளங்கள் தனக்கு உதவினால் மீண்டும் வாழ்க்கையை முன்னகர்த்த முடியுமென்கிறார் ஜீவராசா.





▶ கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட வாழைச்சேனை இந்துக்கல்லூரிக்கு 2017ம் ஆண்டு முதலாம் தரத்தில் கல்வி பயிலவுள்ள மாணவர்களின் பெற்றோர்களால் 300 கதிரைகள் கையளிக்கப்பட்டது. பாடசாலை அதிபர் அ.ஜெயஜீவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கல்குடா வலயக் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் தி.ரவி, வாழைச்சேனை கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.குணலிங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் க.ஜெகதீஸ்வரன், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், பிரதி அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



- குப்பிழான்
ஐ.சண்முகன்



# ஒரு இலக்கியக்காரனின் வாழ்பனுபவங்கள் 13

ஒக்டோபர் மாதம் வந்தாலே யாழ்ப்பாணத்தின் இடப்பெயர்வு நினைவுக்கு வரும். முகநூலிலும் பத்திரிகைகளிலும் அதுபற்றிய நினைவுக் குறிப்புக்களை பலரும் ஒருவித சோகத்துடன் பகிர்ந்து கொண்டிருந்தார்கள். அக் குறிப்புகளில் மனித அவலங்களும் அதேநேரத்தில உன்னதமான மனிதாபிமானங்களும் மனதை நெகிழ்வித்தன. அக்காலத்தில் எங்குமே இடம்பெயராது சொந்தக் கிராமத்தில் சொந்த வீட்டில் இருந்த எனது பெற்றோரின் அனுபவங்களின் சில துளிகளை உங்களுடன் பகிர விரும்புகின்றேன்.

இடம்பெயர்ந்த வலிகாம மக்கள் வடமராட்சிக்கும் தென்மராட்சிக்கும் அலை அலையாக வந்து சேர்ந்தார்கள். எனது ஒரு சகோதரன் குடும்பத்தினரும் மனைவியின் உறவினருமாக எங்கள் வீட்டில் ஏறத்தாழ இருபதுபேர் அடைக்கலமாயினர். எவரிடம் இருந்தும் எனது பெற்றோரைப் பற்றிய தகவலை அறிந்துகொள்ள முடியவில்லை.

ஒருவிதமனப்பதகளிப்புடன் அவர்களைப் பற்றிச் செஞ்சிலுவைச்சங்கத்தில் பதிவு செய்திருந்தேன். ஏற்கனவே எனது இன்னொரு சகோதரனும் அங்கு பதிவு செய்திருப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் சுகமாக இருப்பதாகவே எனது உள்ளுணர்வு உணர்த்திக் கொண்டிருந்தது. கொஞ்சக் காலத்தின் பின் எனது உள்ளுணர்வு உணர்த்தியது போலவே அவர்கள் கிராமத்தில் சுகமாக இருப்பதாக ஒரு தகவல் கிடைத்தது.

நிலைமை ஓரளவு சீரடைந்த பின்னர் மக்கள் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பத் தொடங்கிய பொழுதுகளில் நானும் எனது பெற்றோரைப் பார்ப்பதற்காக ஆவலுடனும் ஒருவித பரபரப்புடனும் சைக்கிளில் புறப்பட்டேன். வழியில் எதிர்ப்பட்ட தடைகளை எல்லாம் தாண்டி மீண்டும் எனது கிராமத்து மண்ணில்கால் பதித்து வீட்டை அடைந்தேன்.

சிறிதும் என்னை எதிர்பாராத எனது வயது முதிர்ந்த பெற்றோர் கண்ணீர் வழிந்தவாறு என்னை எதிர்கொண்டனர். ஏதோ செய்து கொண்டிருந்த எனது அம்மா என்னைக் கண்டதும் 'தம்பி' என அழைத்துக் கொண்டே வந்து என் கைகளைப் பிடித்தார். வழக்கம் போலவே அப்பா தனக்கான கதிரையில் இருந்துகொண்டு இருபிடியாயே முகமலர்ந்து என்னைப் பார்த்துத் தலையசைத்தார்.

'எங்களை ஆக்கள் ஒன்று இரண்டு நாளுக்கு முந்தித்தான் மகாவிஷ்ணு வந்து எங்களைப் பார்த்து சுகம் விசாரித்துப் போனவர். இப்ப தம்பி வந்திருக்கிறாய்' என்றுசொல்லிக் கொண்டே அம்மா சமையலறைக்கு தேநீர் தயாரிக்கப் போய்விட்டார்.

நான் அப்பாவுக்குப் பக்கத்தில் கதிரையை இழுத்துப் போட்டுக் கொண்டே கேட்டேன். "எப்பிடி அப்பா கரைச்சல் கிரைச்சல் படாமல் இருக்க முடிஞ்சுதோ?"

"ஏதோ நகச் ஓட்டி இருக்கிறோம். உனக்குத் தெரியுந்தானே முந்தி இயக்கம் எங்களை வீட்டால வெளிக்கிடுத்தத் தெண்டிச்சாங்களோ. அப்பிடித்தான் இவங்களும் வெளிக்கிடுத்தத் தெண்டிச்சாங்கள். பிறகு வயோதிபர்கள் ஏதோ ஏலாதவையென்று விட்டுவிட்டாங்கள்.

எனக்கு நினைவு வந்தது. நான் நேரில் பார்க்கவில்லை. அவர்கள் சொன்னபோது அந்தக் காட்சி படமாக நெஞ்சில் விரிந்தது. நீட்டிய துப்பாக்கியின் முன் கதிரையில் இருந்தபடி நெஞ்சை நிமிர்த்திக் கொண்டே சொன்னாராம்.

"செத்த தன்னையும் தம்பியனை. கட வேணுமெண்டால் சுடுங்கோ. நான் இந்த இடத்தை விட்டு வரமாட்டேன்."

அம்மா தேநீருடன் வந்தார். சிரித்துக் கொண்டு இருந்தவாறே கதை சொல்லத் தொடங்கினார்.

"ஆமி வந்த புதிசில முதல் இரண்டு மூன்று நாள் கொஞ்சம் கரைச்சலாய்த்தான் இருந்தது தம்பி. அவையளுக்கு எங்களிலும், எங்களுக்கு அவையளிலும் நம்பிக்கை இல்லாமல் இருந்தது. பிறகு பழகிவிட்டுது. நாங்கள் வயதுபோன கரைச்சலில்லாத ஆக்களெண்டு அவையளுக்கு விளங்கிவிட்டுது".

கொண்டுவந்த கோப்பையில் தேநீரை ஊற்றி அப்பாவிடமும் எனக்கும் தந்துவிட்டு, தானும் குடித்தவாறே அம்மா தொடர்ந்து சொல்லிக் கொண்டேயிருந்தார்.

"பிறகு அவங்கள் நல்ல உதவி. முதல் இரண்டொருநாள் சாப்பாட்டுப் பார்சல் கொண்டு வந்து தந்தாங்கள். நாங்கள் சைவம். அரிசி சாமான்களை தாங்கோ நாங்களே சமைக்கிறோமென்று சொன்னேன். அரிசி, பருப்பு, தேயிலை, சீனி எல்லாம் கொண்டு வந்து தந்தாங்கள். சண்டைக்குப் போற இடங்களில தோட்டங்களில கிடைக்கிற காய்கறி எல்லாம் கொண்டுவந்து தருவாங்கள்."

"அப்ப அவங்களால உங்களுக்கு ஒரு கரைச்சலும் இருக்கவில்லையோ?" என்று கேட்டேன்.

"இடையில ஒருநாள் இரவு வந்து கதவு, யன்னல் எல்லாம் உடைக்கப் பார்த்தாங்கள். நாங்கள் இரண்டுபேரும் பயந்து நடுங்கிக் கொண்டு உள்ளுக்குள் இருந்தோம். அடுத்த நாள் காலமை வழக்கமா வந்து பழகிய ஆமிப் பெடியனிட்டை இதைச் சொல்ல அவங்கள் தங்கட பெரியவருக்குச் சொல்லி யிருக்கவேணும் பிறகு ஒண்டும் நடக்கேலை."

'தம்பிக்கும் அப்பாவுக்கும் சாப்பாடு ஏதேன் செய்யவல்லோ வேணும்' என்று சொல்லிக் கொண்டே அம்மா சமையலறைக்குப் போனார். நான் அப்பாவைப் பார்த்தேன். கதிரையில் இருந்தவாறே அவர் சற்றுக் கண்ணயர்ந்த மாதிரி இருந்தது. நானும் அம்மாவின் பின்னால் சமையலறைக்குப் போனேன்.

அம்மா அடுப்பை மூண்டிக் கொண்டிருந்தார். என்னை திரும்பிப் பார்த்து 'சைக்கிளிலையோ வந்தனி? களைச்சுப் போயிருப்பாய் கொஞ்சநேரம் படுத்திரன்" என்றார்.

"இல்லை அம்மா இருக்கிறதை கதைகளைக் கேட்கவேணும்" என்று சொல்லிக் கொண்டே சமையலறைச் சுவர் ஒன்றில் சாய்ந்து கொண்டேன்.

"ஒருநாள் காலமை வந்த ஆமிப் பெடியன் நேற்று புலியொன்றைச் சுட்டு உந்த வாசிகசாலைப் பக்கத்துக்குள் போட்டிட்டோம் எண்டு சொல்லி என்ரை முகத்தைப் பார்த்துக் கொண்டு நிண்டாங்கள். ஆர் பெத்த பிள்ளையோ எண்டு என்ரை மனசு அழுதது. கண்களும் கசிந்த மாதிரிதான் இருந்தது."

"நேற்றைய சண்டையிலை எங்களிலையும் ஒருத்தன் செத்துப் போனான். எங்களோட இங்கவாற அந்த நெடுவல் பொடியன் உங்களுக்கும் அவனை நல்லாத் தெரியுமெண்டு சொல்லிப் போட்டு என்ரை முகத்தைப் பார்த்துக் கொண்டே நிண்டாங்கள். எனக்கு அவனை நல்லாய் தெரியும். வாற நேரமெல்லாம் அம்மா அம்மா என்று சொல்லிக் கொண்டு கிணற்றிலயிருந்து தண்ணி அள்ளித் தாறவன். தேங்காய் உரிச்சுத் தாறவன். எந்த நேரமும் சிரிச்சுக் கொண்டிருக்கிறவன். எனக்கு வலு அருந்தரமாயிருந்தது. கண்ணால கண்ணீர் வடிஞ்சது."

"அழாதையுங்கோ அம்மா. நாங்கள் சும்மா சொன்னனாங்கள். அவன் மற்றக் குறூப்போட சண்டைக்குப் போட்டான். நாளைக்கு இங்கை வருவான் எண்டாங்கள்."

"ஆரெண்டாலும் எங்களைப் போல அம்மாக்கள் பெத்த பிள்ளையள் தானே தம்பி" இதைச் சொன்னபோது அம்மாவின் கண்கள் கலங்கிய மாதிரி இருந்தது. நான் கதையை மாற்றினேன்.

"ஆமிக்காரர் இருந்தாலும் நீங்கள் கஷ்டப்படாமல் நல்லாய்த்தானே இருந்திருக்கிறீங்கள்?"

"இல்லை தம்பி. சண்டை பெருக்கப் பெருக்க அவங்கள் இருக்க இருக்க வீடுகளையெல்லாம் விட்டிட்டு தூரத்தாப் போட்டாங்கள். இடையில கொஞ்சநாள் மனிசரையே காணாமல் இருந்தது. சாப்பாட்டுக்குச் சரியான கஷ்டம் வந்தது. அரிசி, சீனி, தேயிலை ஒண்டும் இல்லை. ஒருநாள் நீ முந்திக் கும்பம் வைக்கவெண்டு கொண்டுவந்த நெல்லைக் குத்திக் கஞ்சி காய்ச்சினோம். பக்கத்து வளவுகளிலை நின்ட இலை, பப்பாசிப் பழங்களைப் புடுங்கித் தின்டோம். ஒருநாள் ரோட்டிலை வாகனம் இரைஞ்ச சத்தம் கேட்டுது. ஓடிப்போய் மறிச்சேன். அவங்கள்தான். அரிசி, சீனி, சாப்பாட்டுச் சாமான் ஒண்டுமில்லை. கஷ்டப்படுறோம் எண்டு சொன்னேன். அனுப்புறோம் எண்டு சொல்லிப் போட்டு இரண்டு, மூன்று நாளில்ல அனுப்பி வைச்சாங்கள்."

இதை ஒரு புனைவு போல நான் பதிவு செய்தாலும் அவ்வளவும் உண்மையில் நடந்த கதை. இன்னும் சில அனுபவங்களை அம்மா சொல்லியிருக்கிறார். சொல்லாத சேதிகள் இன்னும் ஏராளம் இருக்கலாம்.

தந்தையார் தனது தொண்ணூறாவது வயதில் 1998இல் தனது சொந்த வீட்டிலேயே காலமானார். தாயார் கனடாவில் மொன்றியல் நகரில் எனது இன்னொரு சகோதரனுடன் வசிக்கின்றார்.

> தம்பிக்கும் அப்பாவுக்கும் சாப்பாடு ஏதேன் செய்யவல்லோ வேணும்' என்று சொல்லிக் கொண்டே அம்மா சமையலறைக்குப் போனார். நான் அப்பாவைப் பார்த்தேன். கதிரையில் இருந்தவாறே அவர் சற்றுக் கண்ணயர்ந்த மாதிரி இருந்தது.

# ஐயப்பனுக்கு விரதம் இருக்கும் போது கவனிக்க வேண்டியவை



### மாலை அணிவிக்கும் நாள்

கார்த்திகை மாதம் முதல் தேதியன்று மாலை அணிய வேண்டும். அன்று நாள் கிழமை பார்க்க வேண்டியதில்லை. அல்லது சபரிமலைக்கு செல்லும் தினத்திற்கு முன் 41 நாட்கள் விரதம் கடைப்பிடிக்கும் படியாக நல்ல நாள் பார்த்து மாலை அணிய வேண்டும்.

### மாலை அணியும் முறை

54 அல்லது 108 மணிகள் உள்ள துளசி மணிமாலை அல்லது ருத்திராட்ச மாலையை பல முறை சபரிமலை சென்று வந்த சாமியார் ஒருவரைக் குருவாகக் கொண்டு கோவிலிலோ, விளக்கின் முன்போ அல்லது குருநாதரை வணங்கி அணிய வேண்டும்.

### கடை பிடிக்க வேண்டிய விரதங்கள்

(அ) நாள் தோறும் ஆலய வழிபாடு செய்ய வேண்டும். காலை மாலை இரு வேளைகளிலும் நீராடி பூஜை வழிபாடு செய்ய வேண்டும். (ஆ) பிரம்மச்சரிய விரதத்தை கட்டுப்பாடாக கடை பிடிக்க வேண்டும். (இ) காலை மாலை 108 சரணங்களை துளசி, நாட்டுச் சர்க்கரை, பால் இவற்றுள் ஏதேனும் ஒன்றை சிறிது வைத்து நைவேத்தியம் செய்து வணங்க வேண்டும்.

### தவிர்க்க வேண்டிய பொருட்கள், காரியங்கள்:

1. (அ) ஆட்டம் பார்ப்பது (ஆ) காலணிகளை உபயோகிப்பது (இ) சவரம் செய்து கொள்வது (ஈ) புலால் உண்பது (உ) பொய் சொல்லுதல், சூதாடுதல், போதை வஸ்துகள் கூடாது.
2. பகல் நேரத்தில் தூங்கக் கூடாது. இரவில் படுக்கை விரிக்காமல், தலையணை இல்லாமல் சிறு துண்டை மட்டும் விரித்து உறங்க வேண்டும்.
3. துக்ககாரியங்களில் ஐயப்பன்மாரும், அவர் குடும்பத்தவரும் கலந்து கொள்ளக் கூடாது. அப்படி கலந்து கொள்ள நேரிட்டால்தான் அணிந்த மாலையை குருநாதர் மூலம் கழற்றி ஐயப்பன் படத்தில் மாட்டிய பின்னர்தான் கலந்து கொள்ள வேண்டும்.
4. குழந்தை பிறந்த வீட்டிற்கு அல்லது மஞ்சள் நீராட்டு விழா வீட்டிற்குச் செல்லக் கூடாது.

### இரு முடி கட்டும் முறைகள்:

1. இரு முடிக்கட்டும் பூஜையை வீட்டிலேயோ அல்லது கோவிலிலோ நடத்த வேண்டும்.
2. இரண்டு அறை கொண்ட நீளமான பை ஒன்று செய்த அதில் பூஜை சாமான்கள், கற்பூரம் அபிஷேக, நைவேத்திய சாமான்கள், காணிக்கைப் பணம் இவைகளை முன் கட்டிலும் யாத்திரையின் போது தேவையான உணவுப் பண்டங்கள் பின் கட்டிலும் வைத்துக் கொண்டு பையைத் தலையில் எடுத்துச் செல்ல வேண்டும். இதுதான் இரு முடி எனப்படும்.
3. அபிஷேகத்திற்கு பசுவின் நெய்யை உருக்கி ஒரு தேங்காயின் கண்ணைத்திறந்து இளநீரை எடுத்து விட்டு அதற்குள் காய்ச்சிய நெய்யை நிரப்பிக் கார்க்கினால் இறுக மூட வேண்டும்.

### யாத்திரை செல்லும் முறை

1. சாஸ்தா பூஜை அன்னதானம் செய்து யாத்திரை புறப்பட வேண்டும். இரு முடிச் சுமந்து வீட்டை விட்டுப் புறப்படும் போது எவரிடமும் விடை பெறக் கூடாது. திரும்பிக் கூடப் பார்ப்பது கூடாது.
2. கன்னி ஐயப்பன்மார்கள் யாத்திரை புறப்பட்டதிலிருந்து சன்னிதானம் அடையும் வரை தானே தலையிலிருந்து இரு முடியை இறக்கி வைக்கவோ ஏற்றி கொள்ளவோ கூடாது.

குருநாதர் மூலமே இறக்க வேண்டும். ஏற்ற வேண்டும்.

---




சீரடி சாய்பாபா வழிபாடு அதிகரித்து செல்வதே, பாபா எந்த அளவுக்கு மக்கள் மனதில் ஊடுருவி இருக்கிறார் என்பதற்கு சாட்சி. உன்னிப்பாக கவனித்தால் பாபாவின் ஆலயங்களில் ஒரு ஒற்றுமையை அவதானிக்கலாம். அது, பாபாவுக்கு யாராவது ஒரு பக்தர் ஏதாவது உணவுப் பொருட்களைப் படைத்து அதை ஆலயத்துக்கு வரும் மற்றவர்களுக்கு பிரசாதமாகக் கொடுப்பதுதான்.

அதிலும் குறிப்பாக வியாழக்கிழமைகளில் பெரும்பாலான சாய்பாபா தலங்களில் அன்னதானம் நடத்தப்படுகிறது. ஏழைகள் முதல் பணக்காரர்கள் வரை வரிசையில் வந்து நின்று அந்த பிரசாதத்தை வாங்கி சாப்பிடுவதை பெரும் பாக்கியமாக கருதுகிறார்கள்.

சாய்பாபாவே நேரில் வந்து தங்களுக்கு பிரசாதம் தந்து ஆசீர்வதிப்பதாக ஒவ்வொரு பக்தரும் நினைக்கிறார்கள். அதிலும் அன்னதான சேவை ஏற்றுக் கொள்பவர்கள் பாபா தம்மை பரிபூரணமாக ஆசீர்வதிக்கிறார் என்று நம்புகிறார்கள். யார் ஒருவர் தம் பக்தர்களுக்கு அன்னதானம் செய்கிறாரோ, அவரை பாபா தம் கண்ணுக்குள் வைத்து பாதுகாப்பதாக நம்பிக்கை உண்டு.

பொதுவாகவே பக்தர்கள் பசியோடு இருப்பது சாய்பாபாவுக்கு சுத்தமாக பிடிக்காது. யாரும் பட்டினி கிடந்து, உடலையும், உள்ளத்தையும் வருத்திக் கொண்டு தன்னை வழிபட வேண்டாம் என்று சாய்பாபா அறிவுறுத்தி உள்ளார். நன்றாக சாப்பிடுங்கள். பசியாறிய பிறகு நல்ல தெம்பாக இருந்து என்னை ஆராதனை செய்யுங்கள் என்றே பாபா கூறியுள்ளார். அதனால்தான் இன்று நாடு முழுவதும் சீரடி சாய் தலங்களில் தானங்களில் உயர்ந்த அன்னதானம் சீரும், சிறப்புமாக நடத்தப்படுகிறது.

சாய்பாபா, தனக்கான உணவு பற்றி ஒரு போதும் கவலைப்பட்டதே இல்லை. சீரடியில் உள்ள 5 பேரின் வீடுகளில் சென்று யாசகம் கேட்டு உணவு பெறுவதை தம் கடைசி காலம் வரை வழக்கத்தில் வைத்திருந்தார். அப்படி 5 வீடுகளில் வாங்கி வரும் உணவை ஒரு பெரிய சட்டியில் கொட்டுவார். சோறு, குழம்பு எல்லாவற்றையும் மொத்தமாக கலந்து விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் கொடுப்பார்.

பிறகு தான் கொஞ்சம் சாப்பிடுவார். மற்றவற்றை பக்தர்களுக்கு கொடுத்து விடுவார். நாளடைவில் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பாபாவிடம் ஆசி பெற சீரடிக்கு படையெடுக்கத் தொடங்கினார்கள். இதைத் தொடர்ந்தே அந்த பக்தர்களுக்கு உணவூட்டுவதற்கு சாய்பாபா முடிவு செய்தார்.

பக்தர்கள் கூட்டம் அதிகரிக்கும் நாட்களில் சாய்பாபா தம் கையால சமைத்து உணவு கொடுப்பார். சீரடி தலத்தில் பல தடவை இந்த அற்புதம் நடந்துள்ளது. அவர் சமையல் செய்யப் போகிறார் என்றால் காலையிலேயே தெரிந்து விடும். சமையல் செய்வதற்கு அவர் யாரிடமும், எந்தவித உதவியும் பெற மாட்டார். உத்தரவிடவும் மாட்டார்.

நூறு பேருக்கு சமையுங்கள், இருநூறு பேருக்கு சமையுங்கள் என்று பாபா ஒரு வார்த்தை சொன்னால் போதும், சமைப்பதற்கு தயாராக எத்தனையோ பேர் இருந்தனர். ஆனால் சாய்பாபா உணவு தயாரிக்கும் விஷயத்தில் யாரையும் கூட்டு சேர்த்துக் கொள்ள மாட்டார். எல்லாவற்றையும் தாம் ஒருவராகவே செய்வார்.

முதலில் காலையிலேயே கடை வீதிக்கு செல்வார். மூட்டை, மூட்டையாக வாங்குவார். எல்லா பொருட்களுக்கும் சரியாக பணம் கொடுத்து விடுவார்.

அந்த பொருட்களை கடை வீதியில் இருந்து மசூதிக்கு தாமே எடுத்து வருவார். மசூதியில் வைத்து அந்த உணவு தயாரிப்புப் பொருட்களை சுத்தம் செய்வார். கோதுமையை அரைக்க வேண்டும் என்றால் தாமே அரைப்பார். மற்றவர்கள் உதவி செய்ய வந்தாலும் ஏற்றுக்கொள்ளமாட்டார். சமையலுக்கான பொருட்கள் தயாரானதும் பிறகு மசூதி எதிரில் உள்ள அகன்ற மைதானத்தில் சமையலை தொடங்குவார். சமைப்பதற்கு 2 பெரிய பாத்திரங்களை சாய்பாபா வைத்திருந்தார்.

அந்த பாத்திரங்களுக்கு "ஹண்டி" என்று பெயர். ஒரு பாத்திரம் சுமார் 50 பேருக்கு சாப்பாடு தயாரிக்கும் வகையிலும், மற்றொரு பாத்திரம் சுமார் 100 பேருக்கு சாப்பாடு தயாரிக்கும் வகையிலும் இருந்தது. பக்தர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப சாய்பாபா உணவு தயாரிப்பார்.

அவர் உணவு தயாரிக்கும் விதமே அலாதி. தம் பக்தர்கள் நாக்குக்கு ருசியாக சாப்பிட வேண்டும் என்று பார்த்து பார்த்து சமைப்பார்.

அவர் சமைக்கும் 'மீட்டா சாவல்' எனப்படும் சர்க்கரைப் பொங்கல் மிக, மிக ருசியாக இருக்கும். துவரைக்காயைப் பயன்படுத்தி அவர் "வரன்" எனும் குழம்பு தயாரிப்பார். அந்த குழம்பில் கோதுமை மாவை சிறு, சிறு உருண்டைகளாகப் பிடித்து போட்டு பாபா மிதக்க விடுவார். அல்லது கோதுமையை தட்டை ரொட்டிகளாக தயாரித்து மிதக்க விடுவார்.

கூட்டம் அதிகமாக இருக்கும் நாட்களில் அம்பில் எனும் ஒரு வகை உணவை பாபா தயாரிப்பார். அம்பில் என்பது கேழ்வரகு மாவை தண்ணீரில் கலந்து கொதிக்க விட்டு, பிறகு அதை தயிருடன் கலந்து தயாரிக்கப்படும் உணவாகும். உணவு தயாரிக்கும் போது பக்தர்கள் மெய்சிலிர்க்கும் வகையில் ஒரு அற்புதத்தையும் பாபா அடிக்கடி நிகழ்த்தி காட்டுவார். பாத்திரத்தில் போடப்பட்டுள்ள உணவு சரியான பக்குவத்துக்கு வந்து விட்டதா என்பதை அறிய, கரண்டியை விட்டு கிளறி, எடுத்து பார்ப்பதுதான் வழக்கம்.

ஆனால் பாபா அவ்வாறு செய்ய மாட்டார். தனது கையையே உணவு கொதித்துக் கொண்டிருக்கும் பாத்திரத்துக்குள் விட்டு கலக்குவார். தொடவே முடியாத அந்த பாத்திரத்தின் சூட்டை மீறி உணவை கையால் கிளறி விடுவார். பாத்திரத்தின் அடிப்பாகத்தில் இருந்து உணவை எடுத்துப் பார்ப்பார். நாம் அப்படி பாத்திரத்துக்குள் கையை விட்டால், கை வெந்து போகும்.

ஆனால் பாபாவுக்கு எதுவுமே ஆகாது. சூடான உணவுக்குள் அவர் கையை நுழைத்து கிளறி விடும்போது புன்முறுவல் பூத்த முகத்துடன் காணப்படுவார். இந்த அற்புதத்தை பக்தர்கள் பார்த்து மெய் மறந்து போவார்கள். உணவு சமைத்து முடித்ததும், பாத்திரங்கள் அனைத்தும் மசூதிக்கு எடுத்துச் செல்லப்படும். அங்கு அதை கடவுளுக்கு படைத்து பூஜைகள் நடத்தப்படும்.

பிறகு உணவில் ஒரு பகுதியை எடுத்து தனது முதன்மை சீடர்களான மகல்சாபதிக்கும், தத்யா பாட்டீலுக்கும் கொடுத்து அனுப்புவார். இதைத் தொடர்ந்து விருந்து நடைபெறும். பக்தர்களை வரிசையாக உட்கார வைத்து, உணவு பரிமாறப்படும். பாபாவே தம் கைப்பட உணவுகளை எடுத்து வைப்பார்.

இன்னும் என்ன வேண்டும் என்று கேட்டு கேட்டு உணவு வகைகளை அன்புடன் கலந்து கொடுப்பார். அவர் உணவு வழங்கும் போது பிச்சைக்காரர்களும், ஏழைகளும் வரிசையில் இருப்பதுண்டு. அவர்களுக்கு கருணையோடு உணவு கொடுப்பார். ஏழை எளியவர்கள் ரசித்து ருசித்து சாப்பிடுவதை பாபா கண் இமைக்காமல் பார்ப்பார். ஏழைகள் வயிறு நிறைந்து விட்டது என்பதை குறிப்பால் உணரும் போது பாபா மிகவும் மகிழ்ச்சி அடைவார். ஒரு தடவை ஒரு பக்தர், 'நான் சைவ உணவு சாப்பிட மாட்டேன். அசைவ உணவுதான் வேண்டும்' என்று கேட்டார். அதைக் கேட்டு பாபா கோபப்படவில்லை. அசைவ உணவு தயாரிக்க இயலாது என்று சொல்லவில்லை. அந்த பக்தனின் ஆசையை நிறைவேற்றும் வகையில் மாமிசம் வாங்கி வரச் செய்தார். அந்த மாமிசத்துண்டுகளை சுத்தம் செய்து அசைவ உணவை தம் கைப்பட தயாரித்துக் கொடுத்தார். அவர் தயாரித்த அசைவ உணவும் பக்தர்களிடம் ஏகோபித்த வரவேற்பை பெற்றிருந்தது.

ஆனால் சாப்பிடும் விஷயத்தில் பாபா எந்த பக்தருக்கும் எந்த கட்டுப்பாடும் விதித்தது இல்லை. என்ன வகை உணவு பிடிக்கிறதோ, அதை கேட்டு வாங்கி சாப்பிடுங்கள் என்று பக்தர்களிடம் கூறுவார். சாய்பாபா தொடங்கி வைத்த உணவு வழங்கும் பழக்கம் சீரடியில் இன்றும் நடைமுறையில் உள்ளது. திருப்பதி போல எத்தனை பக்தர்கள் வந்தாலும் அவர்களுக்கு உணவு வழங்குகிறார்கள்.

சீரடிக்கு வரும் ஏழைஎளியவர்கள் அந்த உணவை பாபாவே தருவதாக நம்பி சாப்பிட்டுச் செல்கிறார்கள். தற்போது சாய் பக்தர்களில் பெரும்பாலானவர்கள் தினமும் தங்கள் வீட்டில் உணவு சமைத்து முடித்ததும் அதை முதலில் பாபாவுக்கு படைத்த பிறகே உட்கொள்வதை வழக்கத்தில் வைத்துள்ளனர். அவர்களது வீடுகளில் உணவு பஞ்சம் ஏற்பட பாபா விட்டதில்லை என்பது நிதர்சனமான உண்மை.




# இந்தியாவின் வெற்றி... கிரிக்கெட்டின் தோல்வி!

கிறஹம் போர்ட்

[illegible]







## தந்தை மகன் ஒற்றுமை

[illegible]



# முதுகு பகுதியின் கருமை மறைய





# முடி உதிர்வை தடுக்க

முதல் நாள் இரவு தண்ணீரில் வெந்தயத்தை ஊற வைத்து, அதிகாலையில் தண்ணீரை வடி கட்டி விட்டு வெந்தயத்தை அரைத்து, அதனுடன் சிறிது எலுமிச்சை சாறு சேர்த்து நன்கு கலக்க வேண்டும்.

இந்த வெந்தய பசையை உச்சந் தலையில் அழுத்தி தடவ வேண்டும். தலை முழுவதும் தடவிய பிறகு சிறிது நேரத்திற்கு நன்கு அழுத்தி மசாஜ் செய்ய வேண்டும். சிறிது நேரம் கழித்து வெதுவெதுப்பான தண்ணீரில் தலை குளிக்க வேண்டும். இவ்வாறு செய்து வர முடி உதிர்வை தடுக்கலாம்.

### முடி வளர்ச்சிக்கு

ஒரு கைவைப்பு வெந்தயத்தை எடுத்து அதை ஒரு பாத்திரத்தில் தண்ணீர் சேர்த்து கொள்ள வேண்டும். இதை அடுப்பில் வைத்து நன்கு சூடாக்க வேண்டும். வெந்தயம் சிவப்பு நிறமாக மாறும் வரை சூடாக்க வேண்டும். சூடு ஆறியதும் மிக்ஸியில் போட்டு நன்கு பசை போன்று அரைக்க வேண்டும். அதன் பின்னர் அந்தக் கலவையை உச்சந்தலையில் அழுத்தி தடவ வேண்டும்.

சிறிது நேரம் நன்கு ஊற வைத்து வெதுவெதுப்பான தண்ணீரில் தலைக்கு குளிக்க வேண்டும். இந்த முறையை அடிக்கடி பின்பற்ற முடி நன்கு வளரத் தொடங்கும்.

### தலையில் ஏற்படும் அரிப்பை போக்க

முதல் நாள் இரவே வெந்தயத்தை நன்கு ஊற வைக்க வேண்டும். மறுநாள் அதிகாலையில் தண்ணீரை வடிகட்டி விட்டு வெந்தயத்தை நன்கு பசை போல் அரைக்க வேண்டும். அதன் பின்னர் அந்த பசையுடன் ஒரு முட்டையின் மஞ்சள் கருவை கலக்க வேண்டும்.

முட்டை பிடிக்கவில்லை என்றால் அதனுடன் எலுமிச்சை சாறு சேர்த்து கலவையை நன்கு கலக்க வேண்டும். இப்பொழுது இந்தக் கலவையை உச்சந்தலையில் நன்கு அழுத்தி தடவ வேண்டும். பின்னர் நன்கு ஊற வைத்து வெதுவெதுப்பான நீரில் தலைக்கு குளிக்க வேண்டும். இப்படி தொடர்ந்து செய்து வர தலையில் ஏற்படும் அரிப்பை தடுக்கலாம்.

### பொடுகைப் போக்க

முதல் நாள் இரவு தண்ணீரில் வெந்தயத்தை ஊற வைக்க வேண்டும். மறுநாள் அதிகாலையில் தண்ணீரை வடிகட்டி விட்டு வெந்தயத்தை நன்கு பசை போல் அரைக்க வேண்டும். அதன் பின்னர் அந்த பசையுடன் தயிர் சேர்த்து நன்கு கலக்க வேண்டும்.

இந்தக் கலவையை உச்சந்தலையில் முடியின் வேர் வரை படும்படி தடவ வேண்டும். அதன் பின்னர் சுமார் 30 நிமிடங்கள் ஊற வைத்து பின்னர் குளிர்ந்த நீரில் தலைக்கு குளிக்க வேண்டும். இவ்வாறு செய்து வர பொடுகுத் தொல்லை தீரும்.

# முட்டை சான்ட்விச்

**தேவையான பொருட்கள்:** முட்டை 4, கோதுமை பிரட் 6 துண்டுகள், தக்காளி 1, பச்சை மிளகாய் 2, கொத்தமல்லி 1/2 கப், மிளகுத் தூள் 1 டீஸ்பூன், பால் 2 டீஸ்பூன், எண்ணெய் 1 டேபிள் ஸ்பூன், வெண்ணெய் 2 டேபிள் ஸ்பூன், உப்பு தேவையான அளவு

**செய்முறை:** வெங்காயம், கொத்தமல்லி, தக்காளி, பச்சைமிளகாயை பொடியாக நறுக்கி கொள்ளவும். ஒரு வாணலியை அடுப்பில் வைத்து அதில் எண்ணெய் ஊற்றி நறுக்கிய வெங்காயம் மற்றும் சிறிது உப்பைப் போட்டு பொன்னிறமாக வதக்கவும். முட்டையை ஒரு பௌலில் உடைத்து ஊற்றி அதனுடன் பாலையும் ஊற்றி நன்றாக அடித்து வைத்துக் கொள்ள வேண்டும். பின் அதில் பச்சை மிளகாய், தக்காளி, உப்பு, மிளகுத் தூள் போட்டு கலந்து கொள்ளவும்.

வெங்காயம் பொன்னிறமாக வதங்கியதும் அதில் கலந்து வைத்திருக்கும் முட்டை கலவையை ஊற்றி



கிளறவும். அவ்வாறு கிளறும் போது தீயை சற்று குறைவில் வைத்து சிறிது நேரம் வேக விட்டு கொத்தமல்லியைத் தூவி இறக்கவும். இப்போது ஒரு பிரட் துண்டை எடுத்துக் கொண்டு அதில் வெண்ணெயை தடவி முட்டையின் பாதியை வைத்து மற்றொரு பிரட்டிலும் வெண்ணெயை தடவி மூட வேண்டும். இதே போல் மற்ற பிரட்களையும் செய்ய வேண்டும். இப்போது சுவையான முட்டை சான்ட்விச் ரெடி.

இதனை தக்காளி சாஸ் தொட்டு சாப்பிட்டால் மிகவும் நன்றாக இருக்கும்.

# குழந்தைகளுக்கான சிறந்த மசாஜ் தேவை



### தேங்காய் எண்ணெய்

### கடுகு எண்ணெய்

### ஆலிவ் ஆயில்



# குழந்தைகளிடம் இதை கற்று கொடுங்கள்

# அவசியமான உடற்பயிற்சி



ஓடி ஓடிப் படிக்கணும்னு சொல்வார்கள். அதில் உள்ள சந்தோசமே தனி.
அனுபவிக்க ரெடியானவர்கள் இல.1க்கு பார்வையைத் திருப்புங்கள்.

நிலவன்




**1**

இந்த வாரம் நாம் தமிழோடு கொஞ்சம் பயணிக்கலாம். மேழி என்றால் என்ன தெரியுமா? உழவு என்றால் 4க்கும், கலப்பை என்றால் 10க்கும் செல்லுங்கள்.

**2**

தவறு. விடை அறிய 16க்குச் செல்லவும்.

**3**

தப்பறை தான் சரியானது. உங்களுக்கான அடுத்த சொல் 9இல்.

**4**

தவறு. விடை அறிய 10க்குச் செல்லுங்கள்

**5**

தவறான பதில். திருச்செலவுதான் சரியான பதில். இப்போது நேராக 13க்குச் செல்லுங்கள் பார்க்கலாம்.

**6**

அன்னாசி கிடையாது. அப்பிள் தான் பதில். அடுத்த சொல் 8இல் தயார்.

**7**

சத்தம்துப்பறை இரண்டில் எது சரியான தமிழ் பதம்? சத்தம் தான் என்றால் 18க்கும், தப்பறை தான் என்றால் 3க்கும் பயணிக்கலாம்.

**8**

புறணை வஞ்சுகன் சரியான தமிழ்? ஒலிநும் என்ன 15க்கும். ஒலிநம் என்ன 20க்கும் போகலாம்.

**9**

யாத்திரைக்கான சிறந்த தமிழ் தரும்? திருப்பயணம்5 திருச்செலவு14 திருநடை17 ஏற்றவாறு பயணிக்கவும்.

**10**

சரியான பதில் கலப்பை தான். மகிழ்ச்சி. அடுத்த சொல்லுக்கு 19ஐ நாடுங்கள்.

**11**

நாம் அடிக்கடி பாவிக்கும் சொல்லான ஏனைய ஸ்டைலின் தமிழ் வடிவம்? பணிநெறிவு என்றால் 16க்கும், வேலைப் பகு என்றால் 2க்கும் நடவுங்கள்.

**12**

அப்பிள் தான் சரியான பதில். உங்களுக்கான அடுத்த சொல் 6இல்.

**13**

உங்கள் தமிழறிவு எத்தகையது? நீங்கள் தான் அறிஞர். மீண்டும் சந்திப்போம்.

**14**

நன்று. திருச்செலவு சரியான பதிலே. இப்போது 13ஐப் பாருங்கள்.

**15**

ஒலிநும் வைப்பதே சரி. அடுத்தசொல் 17இல்.

**16**

பணிநெறிவு தான் சரியான பதில். உங்களுக்கான அடுத்த சொல் 7இல்.

**17**

திருநடை பிழையான பதில். சரியான பதில் 14இல்.

**18**

சத்தம் அல்ல. தப்பறை தான் சரியான பதில். அடுத்த சொல் 9இல் உங்களுக்காகவே.

**19**

ஆத்தில் பழம் என்பது எந்தப் பழத்தைக் குறிக்கும்? அப்பிள் என்றால் 12க்கும், அன்னாசி என்றால் 6க்கும் வாருங்கள்.

**20**

ஒலிநம் தான் சரியான பதில். அடுத்த சொல்லை 11இல் எதிர்பாருங்கள்.








► வெலிகம பிரதேச மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கோப் திட்டத்தின் கீழ் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் மாவட்ட மட்டத்திலான நெல்லியாழ பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட இளைஞர், யுவதிகளுக்கான பிரதேச இளைஞர் முகாம் முதலமைச்சர் மகா வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.





► தலவாக்கலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தலவாக்கலை பிரதேசத்தில் இனந்தெரியாத நபர்களால் சிங்கள மொழி பாடசாலையில் கல்வி கற்கும் 14 வயது மதிக்கத்தக்க மாணவன் கடுமையாக தாக்கப்பட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த 23 ம் திகதி திங்கட்கிழமை அன்று மாணவன் பாடசாலையில் இருந்து தனது வீட்டுக்கு செல்லும் போது இனந்தெரியாத நபர்கள் இவரை தாக்கியுள்ளனர். இதன்போது மாணவன் மயக்கமடைந்து சில நிமிடங்களுக்கு பின் தனது வீட்டுக்கு சென்றதாக பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். தாக்கிய நபர்கள் குறித்த மாணவனின் கையுறையில் "தமிழ்" என எழுதிவிட்டு சென்றதாக கூறப்படுகிறது.





3-ம் பக்க தொடர்ச்சி

[illegible]






| TOPAZ | TOPAZ TAILORING | TOPAZ MALL |
|---|---|---|
| No. 72, Grand Bazaar, Jaffna. Tel : 021 222 4743 Fax : 021 222 7645 | No. 80/24, Kasthuriyar Road, Jaffna. Tel : 021 222 4643 | No. 195, Power House Road, Jaffna. Tel : 021 222 4833 021 221 9993 |

E-mail : topazagn@gmail.com



# GNAANAMS HOTEL & RESTAURANT

*Is your home away from home!*

**A/C Rooms | Restaurant | Conference Hall | Travels & Tours**

299,301 Clock Tower Road, Jaffna, Sri Lanka.
Tel : + 94 021 222 0630/3 | Fax : + 94 021 222 0631
Email : gnanamshotel@gmail.com | Web : gnanamshoteljaffna.com

# THE VALAMPURI

A Small Luxurious Hotel in Jaffna

148/10, Station Road, Jaffna
Tel : 021 222 0111 / 3444
Web : www.valampurihotel.com
E-mail : info@valampurihotel.com



# YUKON

S O F T W A R E

## ARE YOU FED UP WITH TRAFFIC?

### DO YOU WISH TO HAVE MORE TIME WITH YOUR FRIENDS & FAMILY?

**Do you want to be part of a team that values:**

- Long-term commitment
- Trusted, family-like work environment
- Engage in challenging projects whilst developing your skillset

***Our success is people. We are a European software company with over 15 years of experience in the industry. Our clients originate from the U.S.A and the Netherlands.***

### Java developer (Senior)
Jaffna based

- Has good communication skills and converse articulately in English
- Is able to build a good relationship with your teammates and clients
- Has strong critical thinking skills
- Has 3- 4 years of experience with the following technologies
  - Java 8
  - Experience with Spring Framework (MVC/REST/Security)
  - Hibernate
  - JUnit (Mockito/PowerMock/EasyMock)
  - JavaScript (JS Frameworks, JS Test Frameworks)
  - HTML & CSS is a strong advantage
  - Maven
  - SVN/GIT

### PHP Developer (Senior)
Jaffna based

- Has good communication skills and converse articulately in English
- Is able to build a good relationship with your teammates and clients
- Has strong critical thinking skills
- Has 3- 4 years of experience with the following technologies
  - Experience with PHP Frameworks (Zend,codeigniter, yii,symfony ..)
  - Core PHP
  - Mysql (ORM doctrine, stored procedure development, performance optimization)
  - CMS (wordpress,drupal,magento,woocommerce)
  - PHPUnit
  - FrontEnd (js,html,css, jquery,angular 2,bootstrap)
  - Version control, Svn, git

### C# / .Net Developer (Senior)
Jaffna based

- Has good communication skills and converse articulately in English
- Is able to build a good relationship with your teammates and clients
- Has strong critical thinking skills
- Has 3- 4 years of experience with the following technologies
  - C#
  - Experience with building desktop .NET applications
  - NET Windows Presentation Foundation (WPF)
  - XAML
  - Language Integrated Query (LINQ)
  - Model-View-ViewModel design pattern (MVVM)
  - Serialization

### Front end Developer (Senior)
Jaffna based

- Has good communication skills and converse articulately in English
- Is able to build a good relationship with your teammates and clients
- Has strong critical thinking skills
- Has 3- 4 years of experience with the following technologies
  - Angular2 framework Or React framework
  - Bootstrap
  - Jquery

Applicants should send their CVs along with a cover letter to srilanka@yukon.cv.ua stating the position in the subject line. For more information, visit www.yukon.cv.ua/en


இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிரைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி,
கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 27.11.2016 அன்று வெளியிடப்பட்டது.